# கலைஞரும் நானும்

106

**தமிழக முதல்வர்களில் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் உரையாடும் அனுபவமும் என் ஊடகப்பணிக் காலத்தில் பல முறை அமைந்தன என தனது நினைவுகளைப் பகிர்கிறார் சென்னை தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் எம்.எஸ்.பெருமாள்.**










# ‘காலம் அறிந்தவர் கலைஞர்!’

**எம்.எஸ்.பெருமாள், சென்னை தொலைக்காட்சி முன்னாள் இயக்குநர்**

*1974*-ஆம் ஆண்டு நான் சென்னை வானொலியில் பணியில் இருந்த காலம். அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தார். அந்த ஆண்டு ‘அவள் ஒரு தொடர்கதை’ திரைப்படம் வெளியானது. படத்தின் தயாரிப்பாளர் இராம அரங்கண்ணல் அவர்கள் கலைஞரின் நண்பர். ‘வாழ்க்கை அழைக்கிறது’ என்கிற என் குறுநாவல்தான் அந்தப் படத்தின் கதை. பாலச்சந்தர் இயக்கி இருந்தார்.

படம் வெளியானபோது அனைத்துப் பத்திரிகைகளும் பாராட்டி எழுதின. ‘முரசொலி’யில் அதற்கு முன் திரைப்படங்களைப் பாராட்டி, கலைஞர் எழுதியிருப்பாரா என எனக்குத் தெரியாது. ஆனால், அந்தப் படத்துக்கு முழுப் பக்க விளம்பரம் போல் ‘முரசொலி’யின் முதல் பக்கத்தில் மிகச் சிறப்பான பாராட்டுக் கடிதம் எழுதி இருந்தார் கலைஞர்.

‘குடும்பத்திலும் அலுவலகத்திலும் கவிதாவால் பயனடைந்த நபர்களே, அவளைக் கடுமையான வார்த்தைகளால் காயப்படுத்துவதை’ கருணையுடன் சுட்டிக்காட்டி தாய்க்குலத்தைத் திரையரங்கை நோக்கித் திரள வைத்திருந்தார். தயாரிப்பாளர் அரங்கண்ணல், இயக்குநர் பாலச்சந்தர் ஆகியோரிடம் அவர் கொண்டிருந்த அன்பினால் மட்டும் அந்தக் கட்டுரையை எழுதவில்லை என்றும், அந்தக் கதைக்குள் கழகத்தின் படிப்பினைகளும் உள்ளதாக அவர் நுட்பமாகப் பேசினார்.

குறிப்பாக, கட்டுரையின் கடைசி வரிகளாக “கவிதாவும் கழகமும் ஒன்றுதான். இந்தக் கண்ணோட்டத்தில் மீண்டும் படத்தைப் பார். உனக்குப் புரியும்!” என்று முடித்திருப்பார். அந்தக் காலகட்டத்தில் கட்சியில் அவரோடு வளர்ந்த பலரும், அவரை விட்டு விலகி, விமர்சித்து வந்ததைச் சொல்லாமல் சொல்லி, கழகத்தினருக்குப் பாடம் எடுத்த அந்தப் பண்பு என் நினைவு அடுக்குகளில் நிரந்தரமாகத் தங்கிவிட்டது.

## பணம் பந்தியிலே...

நான் சென்னை வானொலியில் பணியாற்றிய போது ‘விவித் பாரதி’ என்கிற நிகழ்ச்சியைத் தொகுத்து வந்தேன். அப்போது, தினமும் இரவு 8 மணிக்கு இடம்பெறும் ‘தேன்கிண்ணம்’ நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் பரிசுச் சீட்டு விளம்பரம் இடம்பெற வேண்டும் என்பது ஒப்பந்தம்.

அரசு அதிகாரிகள், இரண்டு நாட்களுக்கு ஒருமுறை விளம்பர வாசகங்களை மாற்றி, புதிது புதிதாக ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்களைக் கொண்டு வருவர். ஆனால், அவர்களிடம் நேரம் காலம் என்ற நியதிகள் எதுவும் இருக்காது. இதனால் எங்கள் வேலை திட்டமிடல், வெளியூருக்கு விளம்பரம் அனுப்புவது ஆகியவை பாதிக்கப்படுவது குறித்து அவர்களிடம் விளக்கியும் கேட்கவில்லை. எப்போது கொண்டு வந்தாலும், நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுபோல் நடந்து கொள்வார்கள்.

இதை எப்படிச் சமாளிப்பது எனத் தெரியாமல், ஒருநாள் நிகழ்ச்சியில் “வாங்குங்கள் தமிழக அரசு பரிசுச் சீட்டு” என்ற விளம்பரம் முடிந்தவுடன்,

‘பணம் பந்தியிலே...’

‘காசேதான் கடவுளடா...’

‘பணம் என்னடா பணம்...’

என்ற ரீதியில் தொடர்ந்து மூன்று நாட்கள் திரைப்படப் பாடல்களை ஒலிபரப்பினோம்.

நான்காம் நாள் காலை பதினோரு மணிக்கு முதல்வர் அலுவலகத்திலிருந்து டெலிபோன் அழைப்பு. ‘தேன்கிண்ணம் நிகழ்ச்சி தொடர்பாக சி.எம். பேசணுங்கிறார்’ என்று என்னிடம் ஃபோனைக் கொடுத்தனர். “ஐயா, வணக்கம்!” என்றேன். கலைஞரே பேசினார். ஒரே ஒரு கேள்விதான் கேட்டார்.

“பரிசுச் சீட்டு விளம்பர ஒலிப்பதிவு நாடா எத்தனை மணிக்குள் வந்தால், உங்களுக்கு வசதியாக இருக்கும்?”

“பகல் ஒரு மணிக்குள் வந்தால் நல்லதுங்க ஐயா.”

“பதினோரு மணிக்கெல்லாம் வந்து சேரும்.” மேலே பேச அவசியமில்லாமல் டெலிபோன் இணைப்பைத் துண்டித்துவிட்டார். கடிந்து பேசவில்லை. காரணம் கேட்கவில்லை. பரிசுச் சீட்டு விளம்பரத்தைத் தொடர்ந்து, ‘பணம் பிரதானமில்லை’ என்று பாட்டைப் போட்டு அதன் நோக்கத்தை முறியடிக்கலாமா என்ற கோபம் இல்லை. சொன்னபடியே, பதினோரு மணிக்குள்ளாக விளம்பர ஒலிநாடா வரத்தொடங்கியது.

எந்தப் பிரச்சினைக்கும் காரண காரியங்களை விவாதித்து நேரம் கடத்தாமல், யாரையும் காயப்படுத்தாமல் தீர்வை மட்டுமே முன்னிறுத்தும் கலைஞரின் அணுகுமுறை, என்பதை உணர்ந்தேன்.

**மற்ற கலைஞர்களின் படைப்புகள் வந்து சேருவதற்கு முன்னதாக முதலில் வந்த கவிதை கலைஞரிடமிருந்துதான்! இப்படி எண்ணற்ற அனுபவங்கள் அவரை வியந்து பேசுவதற்கு உள்ளன.**

## நீங்களும் வருவீங்க நானும் வருவேன்...

*1973*-ஆம் ஆண்டில், சென்னை தொலைக்காட்சி நிலையத்துக்கு இடம் ஒதுக்கி, பொதுப்பணித்துறை மூலமாகவே கட்டடமும் கட்டிக் கொடுத்தார். வேலைகள் முடிந்து 1975-ஆம் ஆண்டில் தொடக்க விழா கண்டது. ஆனால், விழா மேடையில் முதலமைச்சர் கலைஞருக்கு இடம் இல்லை. இத்தனைக்கும் விழாவுக்கு முதல் நாள் வாழ்த்துச் செய்தியும் வழங்கி இருந்தார். ஒன்றிய அரசு நிகழ்ச்சி என்பதால், அவர்கள் ஒப்புதல் இல்லாமல் கலைஞரை எப்படி மேடைக்கு அழைப்பது என அன்றைய இயக்குநர்கள் முரளிதரன், பி.வி. கிருஷ்ணமூர்த்தி இருவருக்குமே சங்கடமான சூழ்நிலை.

ஆனால், கலைஞரோ, “போய், ஆக வேண்டிய வேலையைப் பாருங்க முரளி... நீங்களும் என்னைத் தேடி வரத்தான் போறீங்க. நானும் நிலையத்துக்கு வரத்தான் போறேன். காலம் இப்படியே போய்டுமா என்ன?” என்று எங்களை சமாதானப்படுத்தினார். அரசியலில் இதெல்லாம் சகஜம் என்பதுபோல கலைஞர் அதைக் கடந்தார்.

அந்த ஆண்டு அக்டோபர் 2 அன்று காமராஜர் இறப்பின்போது, கலைஞரின் அஞ்சலிக்காக அவர் வீட்டுக்குச் சென்று நான் ஒளிப்பதிவு செய்தேன். பின்னாளில் தேர்தல் நேரத்தில் தேர்தல் பரப்புரை ஒளிபரப்புக்காக நிலையத்திற்கே வந்தார் கலைஞர். ஒளிப்பதிவு முடிந்து புறப்படும் போது நிலைய துணை இயக்குநர் ‘நீங்க அடிக்கடி நம்ம நிலையத்துக்கு வரணும்’ என்று கேட்டுக் கொண்டார்.

‘எலெக்‌ஷன் வந்தா நாங்க வருவோம், இரங்கல் உரை வாங்க நீங்க வரப்போறீங்க, சந்திக்காமலா இருக்கப் போறோம்’ என்றார் பளீரென்று! மேலே பேச்சைத் தொடர வாய்ப்பளிக்காமல், ‘வண்டியை எடப்பா’ என்ற உத்தரவு பறந்தது.

## கச்சிதமான கவிஞர்

1989-ஆம் ஆண்டும் கலைஞர் மீண்டும் முதல்வரான நேரத்தில், அவர் தலைமையில் தொலைக்காட்சிக் கவியரங்கம் தயாரிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கலைஞர் நேரடியாக, இலக்கிய நிகழ்ச்சியில் பங்குகொண்ட முதல் ஒளிப்பதிவு அதுதான்.

பொதுவாகவே ஒளிப்பதிவுக்கு முன்னதாக கவிதைகளை வாங்கி ஆட்சேபணைக்குரிய வரிகள் இருந்தால், மாற்றி வழங்கும்படி வலியுறுத்துவது நிலையத்தின் நடைமுறை. கவிஞர்கள் ஈரோடு தமிழன்பன், வைரமுத்து, அப்துல் ரகுமான், மு.மேத்தா, அரசு மணிமேகலை ஆகியோரின் கவிதைகள் உரிய நேரத்தில் வந்து சேர்ந்துவிடும். இல்லாவிட்டாலும், வரவழைக்கும் அதிகாரம் நிலையத்திற்கு உண்டு. ஆனால், கலைஞரின் தலைமைக் கவிதையை எப்படி முன்னதாகக் கேட்டு வாங்குவது என்ற தயக்கம் எனக்கு... மற்ற கலைஞர்களின் படைப்புகள் வந்து சேருவதற்கு முன்னதாக முதலில் வந்த கவிதை கலைஞரிடமிருந்துதான்! இப்படி எண்ணற்ற அனுபவங்கள் அவரை வியந்து பேசுவதற்கு உள்ளன.

**தொகுப்பு : எஸ்.கதிரேசன்**

....பகிர்வார்கள்

## கலவர மாடலுக்கு மாற்று, ‘திராவிட மாடல்’!

அமைதிப்பூங்காவாகத் திகழும் தமிழ்நாட்டின் சட்டம்-ஒழுங்கு குறித்து, அவதூறுகளைப் பரப்புவதை, அவ்வப்போது சிலர் வாடிக்கையாக வைத்துள்ளனர். திராவிட மாடல் சாத்தியப்படுத்தும் தமிழ்நாட்டின் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, சமூக நல்லிணக்கச் சூழல் ஆகியவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியாத கூட்டத்தின் வயிற்றெரிச்சலின் வெளிப்பாடுதான் அத்தகைய அவதூறுகள்.

ஆனால், தமிழ்நாட்டின் மீது அவதூறு வீசுவோர் ஆதரிக்கும் மாநிலங்கள் எப்படி இருக்கின்றன என்பதை, அவர்கள் வசதியாக மறந்துவிடுகிறார்கள் அல்லது மறைத்து விடுகிறார்கள். 2024-ஆம் ஆண்டில் இந்தியாவில் வகுப்புவாதக் கலவரங்கள் 84% அதிகரித்திருப்பதாகவும், அதில் சிறுபான்மைச் சமூகமான இசுலாமியர்களே அதிகம் குறி வைக்கப்பட்டிருப்பதாகவும் Hegemony and Demolitions: The Tale of Communal Riots in India in-2024 ஆய்வறிக்கை கூறுகிறது.

2023-ஆம் ஆண்டில் 32 வகுப்புவாதக் கலவரங்களே, இந்தியாவில் பதிவாகியிருந்த நிலையில், இந்த எண்ணிக்கை 2024-ஆம் ஆண்டில் 59-ஆக அதிகரித்துள்ளது என இந்த ஆய்வறிக்கை கவலையோடு சுட்டிக்காட்டுகிறது. இந்தக் கலவரங்களில் மொத்தம் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதில் 10 பேர் இசுலாமியர்கள் என்பது கவலைக்குரியது. இந்த 59 கலவரங்களில் 49 கலவரங்கள், பாரதிய ஜனதா கட்சி நேரடியாகவும், அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களிலும்தான் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக, மராட்டிய மாநிலத்தில் நாட்டிலேயே அதிகபட்சமாக 12 கலவரங்கள் பதிவாகியுள்ளன. பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் தலா 7 கலவரங்களும், குஜராத் மற்றும் உத்தரகண்டில் தலா 5 கலவரங்களும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இதுபோன்ற கலவரங்கள் நடைபெறவில்லை என்பது, கூடுதல் செய்தி. இத்தகைய கலவர மாடலுக்கு மாற்றுதான் நமது ‘திராவிட மாடல்’.

## ஃப்ளாஷ்பேக்



### அன்பளிப்பாகப் புத்தகம் பெற்றேன்!



கவிஞர் தமிழ்ச்செம்மல்

1990-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, நான் அன்றைய தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டத்தில், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வந்தேன். அப்போது, சென்னையில் டாக்டர் வாசவன் தலைமையில் நடந்த எழுத்தாளர் மாநாட்டில், கலைஞரிடம் புத்தகத்தை அன்பளிப்பாகப் பெற்றபோது, எடுத்த படம் இது. 2022-ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சர் அவர்களால் ‘தமிழ்ச்செம்மல் விருது’ பெற்றபோது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டது போலவே அகம் மகிழ்ந்தேன்.

**– கவிஞர் தமிழ்ச்செம்மல், மாவட்டத் தலைவர், பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவை, கடலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### முத்தமிழ் மாநாடு!

1950-ஆம் ஆண்டு மே 27, 28 ஆகிய தேதிகளில் கோவையில் முத்தமிழ் மாநாட்டைக் கழகம் நடத்தியது. தமிழ் இலக்கிய உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இம்மாநாட்டில் பாரதிதாசன், சோமசுந்தர பாரதி, அவ்வை துரைசாமிப்பிள்ளை, தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், பெரும்புலவர் வெள்ளை வாரணனார் போன்ற மிகச்சிறந்த தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டு கருத்துகளை வழங்கினர். புகழ்பெற்ற பாடகர்களாகத் திகழ்ந்த சி.எஸ்.ஜெயராமன், எம்.எம்.மாரியப்பா, திருச்சி லோகநாதன், டி.வி. நமச்சிவாயம் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் மாநாட்டைச் சிறப்பித்தன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

730

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131